### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலை!

# பந்தல் ஆர்.சிவா இல்லத் திருமண வரவேற்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது!

தஞ்சை, ஜூலை 26-

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், காவராப்பட்டு ஆர். கருணாநிதி - ஆர்.கே. புவனேஸ்வரி ஆகியோரின் புதல்வர் ஆர். கே. கோபாலுக்கும், திருவாரூர் மாவட்டம், நீடா மங்கலம் வட்டம், வடுவூர் வடபாதி ஆர். சிவசுப்பிரமணியன் (எ) பந்தல் ஆர். சிவா - எஸ். செந்தில் குமாரி ஆகியோரின் புதல்வி எஸ். யாஷினிக்கும் திருமண வரவேற்பு நாளை ( 27.7.2023 வியாழக்கிழமை) மாலை 5 மணியளவில் தஞ்சாவூர், திருச்சி மெயின் ரோடு, மஹாராஜா மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பை கழகத் தலைவர் - முதல்வர் மு.க..ஸ்டாலின் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலை வகிக்கிறார்.

இம்மணவிழா வரவேற்பில் அமைச்சர் பெருமக்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், தோழமைக் கட்சித் தலைவர்கள், இளைஞர் அணி நிர்வாகிகள், கழக முன்னணியினர், நாடாளுமன்ற - சட்டமன்ற இந்நாள் - முன்னாள் உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் வார்டு கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இம்மணவிழாவிற்கு வருகை தருவோரை பந்தல் ஆர்.சிவா-செந்தில்குமாரி சிவா ஆகியோர் வரவேற்கின்றனர்.

“கலைஞரும் கலைநயமிக்க மாநாட்டு அரங்கமும்” எனும் தலைப்பில் கண்காட்சி திறப்பு விழா பந்தல் ஆர்.சிவா ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

### டெல்டா மண்டல

# வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் கூட்டம்!

## நாகை மாவட்டத்தினருக்கு என்.கௌதமன் அறிக்கை!



நாகை, ஜூலை 26 -

26ம் தேதி கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்ளும் டெல்டா மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சி பாசறை கூட்டத்தில்! நாகை மாவட்டத்தைச் சேர்ந்த 651 வாக்குச்சாவடி பொறுப்பாளர்களும் கலந்து கொள்ள வேண்டும் என்று மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தமிழக மக்களின் விடிவெள்ளி, தமிழர்கள் நலன் காக்கும் அன்புத்தலைவர், தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர், கழகத்தலைவர் தளபதி அவர்கள் கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்ற பிறகு நடைபெற்ற, 2019 நாடாளுமன்ற பொதுத்தேர்தல், ஊரக உள்ளாட்சித் தேர்தல், 2021 ம் ஆண்டு நடைபெற்ற சட்ட மன்ற தேர்தல், நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் என அனைத்து தேர்தல்களிலும் வெற்றி வாகை சூடியதை போல் வரும் 2024ல் நடைபெற உள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தலிலும் வெற்றி வாகை சூடிட வேண்டும் என்ற நல்ல நோக்குடன் கழக தலைவர் தளபதி அவர்கள் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 100 சதவீதம் வெற்றியை பெறும் வகையில் கழக வாக்குச்சாவடி பொறுப்பாளர் களுக்கு தேர்தலுக்கு முன் செய்ய வேண்டிய பணிகள் குறித்தும், தேர்தல் நாளன்று ஆற்ற வேண்டிய கடமைகள் குறித்தும் இந்த பயிற்சி பாசறைக் கூட்டத்தில் பயிற்சி அளிக்கப் பட உள்ள டெல்டா மாவட்டங்களில் உள்ளடக்கிய மண்டலத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூரில் உள்ள வாக்குச் சாவடி பொறுப்பாளர்களுக்கான (முகவர்கள்) (பி.எல்.ஏ.2) பயிற்சி பாசறை கூட்டம்! இன்று (26.7.2023 - புதன் கிழமை) திருச்சியில் கருமண்டபம் ராம்ஜிநகர் அருகே நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் கலந்து கொள்ள உள்ளார்கள். பயிற்சி பாசறை கூட்டம் காலை தொடங்கி மாலை வரை ஒரு நாள் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் நாகை மாவட்டத்தில் உள்ள நாகை, கீழ்வேளூர், வேதாரண்யம் தொகுதியில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் உள்ள 651 வாக்குச்சாவடி பொறுப்பபாளர்கள் (பி.எல்.ஏ.2) கலந்து கொள்ள வேண்டும். இந்த கூட்டத்தில் கழக வாக்குச்சாடி பொறுப்பாளர்கள் அனைவரும் காலை 8.00 மணிக்கே தலைமைக் கழகம் வழங்கியுள்ள அடையாள அட்டை மற்றும் மாவட்டக் கழகம் சார்பில் வழங்கப்படும் பேனா மற்றும் குறிப்பேடுடன் பயிற்சி பாசறை கூட்டம் நடைபெறும் இடத்திற்கு சென்று கலந்து கொள்ள வேண்டும். வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் அனைவரும் குறித்த நேரத்தில் கலந்து கொள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் உரிய ஏற்பாடுகளை செய்திட வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர். என். கௌதமன் கூறியுள்ளார்.

### திருச்சியில் இன்று பாக முகவர்கள் கூட்டம்! முதல்வர் பங்கேற்கிறார்!

# புதுக்கோட்டை வடக்கு மாவட்ட பாக முகவர்கள் கலந்து கொள்வீர்!

## மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லப் பாண்டியன் அறிக்கை!



புதுக்கோட்டை, ஜூலை 26-

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கேகே.செல்லப் பாண்டியன் அறிக்கை வருமாறு:-

தமிழக முதல்வர்- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் டெல்டா மண்டலத்திற்குட்பட்ட மாவட்ட கழகங்களில் உள்ள, தொகுதியில் அடங்கியுள்ள வாக்கச்சாவடி நிலைக்குழு முகவர்கள் பயிற்சி பாசறை கூட்டம் நாளை (26.07.2023 - புதன்கிழமை) காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை திருச்சி ராம்ஜிநகர் என்ற இடத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் புதுக் கோட்டை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட புதுக்கோட்டை, கந்தர்வ கோட்டை, விராலி மலை ஆகிய 3 சட்டமன்றத் தொதிகளின் வாக்குச் ச்சாவடி நிலைக்குழு முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இதற்கான ஏற்பாட்டினை ஒன்றிய, நகர, பேரூர், வட்ட கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் ஏற்பாடுகள் செய்து உரிய நேரத்தில் அழைத்து வருமாறு கேட்டுகொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன் தனது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### திருச்சியில் வாக்குச்சாவடி பாக முகவர்கள் கூட்டம்!

# கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்!

## பெரம்பலூர் மாவட்ட கழகத்தினருக்கு குன்னம் சி.இராஜேந்திரன் வேண்டுகோள்!



பெரம்பலூர், ஜூலை 26-

பெரம்பலூர் மாவட்ட கழகச்செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

தமிழ்நாடு முழுவதும் உள்ள ஐந்து மண்டலங்களிலும் வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கான ஒருநாள் பயிற்சி பாசறை கூட்டத்தை நடத்த தி.மு.க. திட்டமிட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக டெல்டா மண்டலத்திற்குட்பட்ட மாவட்ட கழகங்களில் உள்ள தொகுதியில் அடங்கியுள்ள வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சி பாசறை கூட்டம் 26.07.2023, புதன் கிழமை, காலை 10.00 மணி முதல்,மாலை 4.00 மணி வரை திருச்சி, ராம்ஜி நகர், கருமண்டபம் எனுமிடத்தில் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார். இக்கூட்டத்தில் பெரம்பலூர் மாவட்டத்திற்குட்பட்ட, பெரம்பலூர், குன்னம் சட்டமன்ற தொகுதிகளின் வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2) அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கான ஏற்பாடுகளை ஒன்றிய,நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் ஏற்பாடுகள் செய்து உரிய நேரத்தில் அனைவரையும் அழைத்து வருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# முதல்வர் பங்கேற்பு: வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் கூட்டம்!

## மயிலாடுதுறை நிவேதா எம்.முருகன் அறிக்கை!



நாகை, ஜூலை 26 -

மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் அறிக்கை விடுத்துள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

டெல்டா மாவட்டங்களில் உள்ளடக்கிய மண்டலத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூரில் உள்ள வாக்குச் சாவடி பொறுப்பாளர்களுக்கான (முகவர்கள்) (பி.எல்.ஏ.2) பயிற்சி பாசறை கூட்டம் இன்று (26.7.2023 - புதன் கிழமை) அன்று திருச்சியில் கருமண்டபம் ராம்ஜிநகர் அருகே நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் கலந்து கொள்ள உள்ளார்கள். பயிற்சி பாசறை கூட்டம் காலை தொடங்கி மாலை வரை ஒரு நாள் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள மயிலாடுதுறை, பூம்புகார், சீர்காழி தொகுதியில் ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் உள்ள 860 வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (பி.எல்.ஏ.2) கலந்து கொள்ள வேண்டும். இந்த கூட்டத்தில் கழக வாக்குச்சாடி பொறுப்பாளர்கள் அனைவரும் காலை 8.00 மணிக்கே தலைமைக் கழகம் வழங்கியுள்ள அடையாள அட்டை மற்றும் மாவட்டக் கழகம் சார்பில் வழங்கப்படும் பேனா மற்றும் குறிப்பேடு டன் பயிற்சி பாசறை கூட்டம் நடைபெறும் இடத்திற்கு சென்று கலந்து கொள்ள வேண்டும். வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் அனைவரும் குறித்த நேரத்தில் கலந்து கொள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் உரிய ஏற்பாடுகளை செய்திட வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர். நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., கூறியுள்ளார்.

### திருச்சியில், இன்று நடைபெறுகிறது

# முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று சிறப்புரையாற்றும் - டெல்டா மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) பயிற்சி பாசறைக் கூட்டம்!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கடந்த 22.03.2023 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் “முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை முன்னிட்டு கழகத்தில் ஒரு கோடி புதிய உறுப்பினர்களை சேர்த்தல், முழுமையாக பூத் கமிட்டி அமைத்தல்” உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேற்கண்டதீர்மானங்களின்படி, கழகத்தில்மொத்தம்இரண்டுகோடிஉறுப்பினர்களை வெற்றிகரமாகச்சேர்த்து, ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் வாக்குச்சாவடிபொறுப்பாளர்கள் (BLA2) நியமிக்கப்பட்டு தலைமைக் கழகத்தால் முழுமையாக சரிபார்க்கப்பட்டுள்ளது.

கழகத் தலைவர் அவர்களின் அறிவுரையின்படி சரிபார்க்கப்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கு, மாநிலம் முழுக்க கழக மாவட்டங்களை ஐந்து மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, அதிலுள்ள ஒவ்வொரு மண்டல வாரியாக, வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) ஒரு நாள் பயிற்சி பாசறைக்கூட்டம் நடத்திட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, டெல்டா மண்டலத்திற்குட்பட்ட மாவட்டங்களின் “வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) பயிற்சி பாசறைக் கூட்டம்” இன்று (26-07-2023 - புதன்கிழமை) அன்று திருச்சி, ராம்ஜி நகர், கருமண்டபம் என்ற இடத்தில், முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் சிறப்புரையாற்றிட நடைபெற உள்ளது.

டெல்டா மண்டலத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள 15 கழக மாவட்டங்களின், மாவட்டக் கழகச் செயலாளர்கள், தங்களது மாவட்டத்துக்கு உட்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) அனைவரையும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ள உரிய ஏற்பாடுகளை செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

**1. அரியலூர், 2. பெரம்பலூர், 3. கடலூர் கிழக்கு, 4. கடலூர் மேற்கு, 5. மயிலாடுதுறை, 6. நாகப்பட்டினம், 7. திருவாரூர், 8. தஞ்சாவூர் வடக்கு, 9. தஞ்சாவூர் மத்திய, 10. தஞ்சாவூர் தெற்கு, 11. திருச்சிராப்பள்ளி தெற்கு, 12. திருச்சிராப்பள்ளி மத்திய, 13. திருச்சிராப்பள்ளி வடக்கு, 14.புதுக்கோட்டை தெற்கு, 15. புதுக்கோட்டை வடக்கு**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு

# திருச்சி தெற்கு மாவட்டம் சார்பில் சிறப்பான வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!



திருச்சி, ஜூலை 26 -

கழகத் தலைவருக்கு திருச்சி தெற்கு மாவட்டத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படும் என்று மாவட்ட கழகச் செயலாளரும், அமைச்சருமான, அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், இன்று (26/07/2023 புதன்கிழமை) காலை 10.00 மணிக்கு திருச்சிக்கு வருகை தரும் கழகத் தலைவர் தமிழக முதல்வர் அவர்களுக்கு திருச்சி விமான நிலையத்தில் திருச்சி தெற்கு மாவட்ட திமுக சார்பில் சிறப்பான வரவேற்பு கொடுக்க வேண்டும் என கழக நிர்வாகிகளை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல 26/07/2023 புதன்கிழமை காலை 8.30 மணிக்கு திருச்சி ராம்ஜி நகர், கருமண்டபத்தில் நடைபெறும் 15 மாவட்ட தி.மு.க. பாக முகவர்கள் (BLA 2) பயிற்சி பாசறை கூட்டத்தில், திருச்சி தெற்கு மாவட்டத்தை சார்ந்த, அனைத்து பாக முகவர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.

ஏர்போர்ட் வரவேற்பு நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கழகத் தொண்டர்களும் பொது மக்களும் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### உடுமலை நாராயணன்
### ஜூலை 26 (1971)



**கோவை மாவட்டக் கழகச் செயலாளராகவும், பொள்ளாச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.**

**கொங்கு நாட்டில் கழகத்தை கட்டி வளர்த்த சிறந்த செயல்வீரர். உடுமலை தேசிங்கு என்று நண்பர்களால் புகழ்ச்சியாக அழைக்கப்பட்ட முன்னணித் தோழரும் – கழகம் துவங்கிய காலம் முதல் கோவை மாவட்டக் கழக நிர்வாகத்தில் பெரும் பங்கெடுத்துக் கொண்டவரும் கழகத் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் விளங்கியவர்.**

**“1967ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் கோவை மாவட்டத்தை கழகத்தின் கோட்டையாக்கிய பெருமைக்குரியவர்” என தலைவர் கலைஞர் இவரைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை**
**விழுப்புரம் நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
**ஓ.அ. எண். 8/2023-24/ தவஅ / நாள் : 19.07.2023**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, விழுப்புரம் வட்டம் அவர்களால், சி.ஆர்.ஐ.டி.பி.2023-24-ன் கீழ் அரியலூர் (நெ), க(ம)ப, கோட்டத்தில் (VPM-27) ஒரு பணிக்கு **இணையவழியில்** ஒரு உறை முறையில் சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **16.08.2023, 15.00 மணி** வரை வரவேற்கப்படுகிறது.

பணியின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதரவிபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **31.07.2023 முதல்** தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ./ 3955 /ஒப்பந்தப்புள்ளி/2023

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ)**
**க&ப வட்டம், விழுப்புரம்.**

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"